**மாகாணக் கல்வித் திணைக்களம்**
**வடக்குமாகாணம்**
**Provincial Department of Education**
**Northern Province**

**இரண்டாம் தவணைப்பரீட்சை 2022**

| | | |
|---|---|---|
| **தரம் :- 11** | **வணிகக்கல்வியும், கணக்கீடும் II**<br>**Business studies and Accounting II** | **நேரம் :-**<br>**2 மணித்தியாலம்** |
| **சுட்டெண்:...............................** | **60 T II** | **மேலதிக வாசிப்பு நேரம் :-**<br>**10 நிமிடம்** |

**அறிவுறுத்தல்:-**
**முதலாம் வினா உட்பட, பகுதி 1 இலிருந்து இரண்டு வினாக்களையும் பகுதி 11 இலிருந்து இரண்டு வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.**

## பகுதி II

**வினா இல 01**
**(01) கீழ்க்குறித்த தகவலை அடிப்படையாகக் கொண்டு 1 - 10 வரையான வினாக்களுக்கு விடையளிக்குக.**

மன்னாரில் வசிக்கும் முகாமைத்துவ பட்டதாரியான வாகீசன் என்பவர் பிரபல பாடசாலையில் வணிகக்கல்வி பாடம் கற்பிக்கும் ஆசிரியராவார். இவர் ஆக்கத்திறன் கொண்டவராகவும், புத்தாக்க சிந்தனை கொண்டவராகவும் காணப்பட்டமையால் தனது ஓய்வு நேரங்களில் பல்வேறு விழாக்களுக்குத் தேவையான மேடை அலங்காரங்களை வேறுபட்ட வடிவமைப்புகளில் இயற்கையான பொருட்களைக் (பூக்கள், இலைகள்) கொண்டு வாடிக்கையாளரின் கட்டளைகளுக்கேற்ப அமைத்துக் கொடுக்கும் வணிகமொன்றை 'Happy Life' என்னும் பெயரில் 01.01.2022 இல் ஆரம்பித்தார். இதற்காக தனது சொந்த சேமிப்பில் இருந்து ரூ 500 000 காசினை மூலதனமாக ஈடுபடுத்தியதுடன் ரூ 300 000 பெறுமதியான வீட்டின் ஒரு பகுதியான கட்டடம் ஒன்றை வணிகத்தின் தேவைக்காக பயன்படுத்தி வருகின்றார். 05.01.2022 இல் 12% வருடாந்த வட்டியில் ரூ 800 000 வங்கிக்கடன் ஒன்றைப் பெற்று அன்றைய தினமே வணிகத்தின் பயன்பாட்டிற்காக விநியோக வாகனம் ஒன்றைக் கொள்வனவு செய்தார். வணிகத்தின் தேவை கருதி தன்னிடம் உயர்தரம் கல்வி கற்ற நிகழ்ச்சி முகாமைத்துவப் (Event Management) பட்டம் பெற்ற இரு மாணவர்களை மாதாந்தம் தலா ரூ 20000 சம்பளத்துடன் வேலைக்கமர்த்தியதுடன், பல்கலைக்கழகத்திற்குத் தெரிவான ராகுல் என்பவரை ஆட்சேர்த்து ரூ 10 000 சம்பளம் வழங்கி வணிகத்தின் கணக்கீட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ள பயிற்சியளித்து வருகின்றார்.

- பின்வருவன 31.01.2022 இல் முடிவடைந்த மாதத்தில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்களாகும்.

| | | |
|---|---|---|
| விநியோக வான் சாரதி சம்பளம் | | ரூ 15 000 |
| மின்சாரக் கட்டணம் | | ரூ 3 000 |
| எரிபொருட் செலவு | | ரூ 5 000 |
| மேடை அலங்காரப் பொருட்கொள்வனவு | காசு | ரூ 30 000 |
| | கடன் | ரூ 25 000 |
| மேடை அலங்காரம் மூலம் பெற்ற வருமானம் | காசு | ரூ 140 000 |
| | கடன் | ரூ 60 000 |

தனது எதிர்காலத்தில் சந்தையை விரிவுபடுத்தும் நோக்கில் வெளிமாவட்டங்களில் இருந்து கட்டளைகளை பெறும் வகையில் விளம்பரங்களை மேற்கொள்ளவும், மேலதிகமாக இன்னுமொரு விநியோக வான் ஒன்றைக் கடனுக்கு கொள்வனவு செய்யவும் தீர்மானித்திருந்தார்.

**மேலதிக தகவல்கள்**

- ➢ கட்டடம், விநியோக வானுக்கு வருடாந்தம் 12% பெறுமானத்தேய்வு செய்யப்படல் வேண்டும்.
- ➢ ஜனவரி மாத தொலைபேசிக்கட்டணம் ரூ 2000 31.12.2022 வரை செலுத்தப்படவில்லை.
- ➢ அனைவரது சம்பளங்களும் ஜனவரி மாதம் செலுத்தப்பட்டுள்ளது.

1) (அ) Happy Life வணிகத்தின் உற்பத்திப் பொருட்களை உற்பத்தியின் தன்மை அடிப்படையில் எவ்வகை வணிகத்துக்குள் உள்ளடக்க முடியும்?

(ஆ) வணிகத்தின் நோக்கத்தின் அடிப்படையில் Happy Life வணிகமானது எவ்வகை வணிகத்திற்கு உரித்தானதாகும்?

2) (அ) பின்வருவன வணிகத்தின் வணிகச் சூழல் ஆகும்.

i. வாகீசனின் ஆக்கத்திறன், புத்தாக்க சிந்தனை

ii. நிகழ்ச்சி முகாமைத்துவம் பட்டம் பெற்ற ஊழியர்கள்

மேற்கூறிய விடயங்கள் பலமா? பலவீனமா? என்பதைக் குறிப்பிடுக.

(ஆ) குறித்த வணிகத்தில் அக்கறை செலுத்தும் தரப்பினர் இருவரை சம்பவத்திலிருந்து உதாரணம் மூலம் குறிப்பிடுக.

3) (அ) Happy Life வணிகத்தினை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் முகாமைத்துவக் கருமங்கள் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு உதாரணம் தருக.

(1) திட்டமிடல் (2) ஒழுங்கமைத்தல்

(ஆ) Happy Life வணிகத்தில் இனங்காணக் கூடிய சந்தைப்படுத்தல் கலவை ஒன்றினைக் குறிப்பிடுக.

4) Happy Life வணிகத்துடன் தொடர்புடைய விதத்தில் பின்வரும் உற்பத்திக் காரணிகள் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வோர் உதாரணம் தருக.

(அ) நிலம் (ஆ) உழைப்பு (இ) மூலதனம் (4) முயற்சி

5) (அ) 01.01.2022 இல் இருந்தவாறான Happy Life வணிகத்தின் உரிமையாண்மையின் பெறுமதியினைக் குறிப்பிடுக.

(ஆ) 05.01.2022 ஆந் திகதியில் Happy Life வணிகத்தின் சொத்துக்களையும், பொறுப்புக்களையும் தொகைகளுடன் எழுதுக.

6) (அ) 31.01.2022 இல் சென்மதி தொலைபேசிக் கட்டணம் என்பதற்கான இரட்டைப்பதிவினைத் தருக.

(ஆ) மேற்படி கொடுக்கல் வாங்கலுக்குரிய மூல ஆவணம், மூலப்பதிவேட்டினைக் குறிப்பிடுக.

7) 31.01.2022 Happy Life வணிகத்தின் காசு மீதியினைக் கணிப்பிடுக.

8) 31.01.2022 Happy Life வணிகத்தின் தேறிய இலாபம் / தேறிய நட்டத்தினைக் கணிப்பிடுக.

9) 31.01.2022 இல் இருந்தவாறான Happy Life வணிகத்தின் பின்வருவனவலற்றைக் கணிப்பிடுக.

(அ) நடைமுறைச்சொத்து

(ஆ) நடைமுறையல்லாச் சொத்தின் தேறிய பெறுமதி

(இ) நடைமுறைப் பொறுப்பு

(ஈ) நடைமுறை அல்லாத பொறுப்பு

10) Happy Life வணிகத்தின்

(அ) 31.01.2022 இல் இருந்தவாறான உரிமையாண்மை எவ்வளவு?

(ஆ) 31.01.2022 இல் இருந்தவாறான மொத்தச் சொத்துக்களின் பெறுமதி எவ்வளவு?

(10 x 2 = 20 புள்ளிகள்)

**வணிகக்கல்வி**

**(இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக)**

**வினா இல 02**

i. (அ) மனித தேவை என்பதனால் கருதப்படுவது யாது?
(ஆ) வணிகமொன்றின் ஊழியர்கள் வணிகத்தின் மீது அக்கறை கொள்வதற்கான இரு காரணங்களைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

ii. பின்வரும் கூற்றுக்கள் **உண்மையா, பொய்யா** என்பதனைக் குறிப்பிடுக.
a) மனிதத் தேவைகள் இயல்பாக எழுவதில்லை, விருப்பங்களே இயல்பாக எழுபவைகளாகும்.
b) உற்பத்திக்காக இயற்கையாக கிடைப்பவைகளும் உற்பத்தியின் போது துணையாகக் கொள்ளப்படுபவைகளும் மூலதனம் எனப்படும்.
c) வணிக இடர்களைப் பொறுப்பேற்று புத்துருவாக்கங்களை அறிமுகப்படுத்தி வணிக நடவடிக்கைகள் தொடர்பான தீர்மானங்களை மேற்கொள்பவர் முயற்சியாளர் ஆவார்.
d) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு ஓர் சேவை வழங்கும் வணிகமாகும்.
(02 புள்ளிகள்)

iii. சாட்டி கடற்கரையில் கடல் உணவுகளை கொள்வனவு சுகாதார முறையில் பதப்படுத்தி உல்லாசப் பயணிகளுக்கு விற்பனை செய்யும் வணிகமொன்றை இரு ஊழியர்களின் உதவியுடன் சுதன் நடாத்துகின்றார்.
(அ) சுதன் வணிகத்தினால் நிறைவேற்றப்படும் தேவை யாது?.
(ஆ) சுதன் வணிகத்தில் அக்கறை செலுத்தும் இரு தரப்பினரை உதாரணத்துடன் குறிப்பிடுக.
(02 புள்ளிகள்)

iv. காயத்திரி தனது நண்பியான கஜந்தினியுடன் இணைந்து அழகுக்கலைக்கூடம் ஒன்றை “New Fashion Beauty parlour” எனும் பெயரில் நடத்துகின்றார்.
(அ) இவ்வணிகத்தைப் பதிவு செய்வதன் மூலம் பெறக்கூடிய அனுகூலங்கள் எவை?.
(ஆ) தனிவியாபார வணிகமொன்றை பங்குடமை வணிகமாக மாற்றுவதன் மூலம் பெறக்கூடிய அனுகூலங்கள் எவை? (02 புள்ளிகள்)

(மொத்தம் 08 புள்ளிகள்)

**வினா இல 03**

i. இலாப நோக்கற்ற தனியார்துறை வணிகங்கள் இரண்டு தருக. (02 புள்ளிகள்)

ii. பின்வரும் கூற்றுக்கள் **உண்மையா, பொய்யா** என்பதனைக் குறிப்பிடுக.
a) நுகர்வோருக்கு அன்றாடத் தேவைகளுக்குத் தேவையான பொருள்களை தேவையான அளவில் விற்பனை செய்தல் சில்லறை வியாபாரி ஆவார்.
b) மொத்த வியாபாரி நுகர்வோருடன் நேரடியாகத் தொடர்புபடுவார்.
c) நிலையான வைப்புச் சான்றிதழை எந்தவொரு நபருக்கும் சாட்டுதல் செய்ய முடியும்.
d) குறுக்குக் கோடிட்ட காசோலையொன்றை வைப்பில் இடும் போது புறக்குறிப்பிடல் தேவையாகின்றது. (02 புள்ளிகள்)

iii. இலங்கையில் தற்போதைய பொருளாதாரச் சூழல் நிலைமை காரணமாக எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட்டதுடன் விலையும் அதிகரித்திருந்தது. இதற்குக் காரணம் எரிபொருள் இறக்குமதிக்கு வேண்டிய அந்நிய செலாவணிப் பற்றாக்குறை எனக் கூறப்படுகின்றது.
(அ) அந்நிய செலாவணி இலங்கைக்கு கிடைக்கும் வழிமுறைகள் இரண்டு தருக.
(ஆ) மசகு எண்ணெய் பாவனையைக் குறைப்பதற்கான வழிமுறைகள் இரண்டு தருக. (02 புள்ளிகள்)

iv. கார்கில்ஸ் பூட்ஸ் சிற்றியில் பொருள்களைக் கொள்வனவு செய்யச் சென்ற நண்பர்களான ரகு, ராம் என்பவர்களில் ரகு வரவு அட்டை மூலமாகவும், ராம் கடனட்டை மூலமாகவும் பணம் செலுத்தினர்.
(அ) இருவரில் வங்கிக்கணக்கைக் கொண்டிருப்பவர் யார்?.
(ஆ) ரகுவைக் காட்டிலும் ராம் வைத்திருக்கும் அட்டை மூலம் பெறக்கூடிய அனுகூலங்கள் இரண்டு தருக. (02 புள்ளிகள்)

(மொத்தம் 08 புள்ளிகள்)

**வினா இல 04**

i. ஆயுட் காப்புறுதிக்கும் ஆதனக் காப்புறுதிக்கு இடையிலான வேறுபாடுகள் இரண்டு தருக. (02 புள்ளிகள்)

ii. பின்வரும் கூற்றுக்கள் **உண்மையா, பொய்யா** என்பதனைக் குறிப்பிடுக.

a) தொடர்பாடல் செயன்முறையில் செய்தி தொடர்பில் பெறுபவரது நடவடிக்கை துலங்கள் ஆகும்.

b) ஆதனக் காப்புறுதியில் இடர் நிச்சயமற்றதாகக் காணப்படுகின்ற அதே வேளை ஆயுட் காப்புறுதிக்கான இடர் நிச்சயமாகக் காணப்படும்.

c) சிறப்புமுறை குறுக்குக்கோடிட்ட காசோலையை எந்தவொரு வணிக வங்கியிலும் வைப்பிலிட முடியும்.

d) விபத்தை அறிவிக்கும் மின்சார தானியங்கி ஊதுகுழல் ஓர் இலத்திரனியல் சைகையான ஊடகமாகும். (02 புள்ளிகள்)

iii. ரமணன் என்பவர் யாழ்ப்பாண புகையிரத நிலையத்திற்கு அருகில் தனது தயாரிப்புக்களான பனங்கட்டிகளை விற்பனை செய்கின்றார். இவர் இரண்டு ஊழியர்களை வேலைக்கு அமர்த்தியிருந்ததோடு அவர்களுக்கு வேண்டிய வேலை தொடர்பான அறிவுறுத்தல்களையும் வழங்கி வருகின்றார். மேலும் தனது விற்பனைப் பொருட்களை கழிவுடன் விற்பனை செய்கின்றார்.

(அ) மேற்படி சம்பவத்தில் இருந்து நெறிப்படுத்தல் கருமத்திற்கு உதாரணம் ஒன்று தருக.

(ஆ) மேற்படி சம்பவத்தில் இருந்து சந்தைப்படுத்தல் கலவை மாறியான விலைக்கு உதாரணம் ஒன்று தருக. (02 புள்ளிகள்)

iv. யாழ்ப்பாண சர்வதேச விமான நிலையத்தினை அபிவிருத்தி செய்து வெளிநாட்டு விமானங்களை வரச்செய்வதற்கான ஆரம்ப கட்ட வேலைகள் நடைபெறுவதாக பத்திரிகை செய்தி ஒன்று தெரிவித்தது.

(அ) இங்கு குறிப்பிட்ட போக்குவரத்து அடிப்படை மூலங்கள் இரண்டுக்கு ஒவ்வொரு உதாரணம் தருக.

(ஆ) சர்வதேச விமான சேவையினை வழங்கும் இலங்கை நிறுவனம் ஒன்று தருக. (02 புள்ளிகள்)

(மொத்தம் 08 புள்ளிகள்)

## பகுதி II – கணக்கீடு

**(இரண்டு வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக)**

**வினா இல 05**

i. (அ) சொத்துக்கள் என்றால் என்ன?

(ஆ) வணிகக் கொடுக்கல் வாங்கல் என்பதனால் கருதப்படுவது யாது? (2 புள்ளிகள்)

ii. வணிகம் ஒன்றில் நிகழ்ந்த பின்வரும் கொடுக்கல் வாங்கல் ஒவ்வொன்றையும் பதிவதற்கு பயன்படுத்தப்படும் மூலஆவணம் மற்றும் மூலப்பதிவேடு ஆகியவற்றைத் தனித்தனியாக எழுதுக?

(அ) உரிமையாளர் தனது சொந்தத் தேவைக்காக வணிகத்தில் இருந்து எடுத்த பொருட்கள் ரூ.12 000

(ஆ) சமீருக்கு விற்பனை ரூ.25 000 (2 புள்ளிகள்)

iii. ரூபன் வணிகத்தின் கொடுக்கல் வாங்கல்கள் நான்கு, வணிகத்தின் கணக்கீட்டுச் சமன்பாட்டில் தாக்கம் செலுத்திய விதம் பின்வருமாறு

| திகதி | கொடுக்கல் வாங்கல் இல | சொத்துக்கள் + ரூ | உரிமை + ரூ | பொறுப்புக்கள் ரூ |
|---|---|---|---|---|
| 04.06.2022 | 1 | +20000 (இயந்திரம்)<br>- 20 000 (காசு) | | |
| 15.06.2022 | 2 | + 15 000 (கடன்பட்டோர்)<br>- 10 000 (சரக்கிருப்பு) | + 5 000 (இலாபம்) | |
| 22.06.2022 | 3 | - 8 000 (காசு) | - 8 000 (வாடகை) | |
| 28.06.2022 | 4 | + 12 000 (சரக்கிருப்பு) | | + 12 000 (கடன்கொடுத்தோர்) |

மேலும் 01.06.2022 இல் ரூபன் வணிகத்தின் மொத்தச் சொத்துக்கள் ரூ.375 000 உம் மொத்தப் பொறுப்புக்கள் ரூ.60 000 உம் ஆகும்.

**வேண்டப்படுவது**

(அ) 15.06.2022 அன்று நிகழ்ந்த கொடுக்கல் வாங்கலைத் தொகையுடன் எழுதுக?

(ஆ) 28.06.2022 இல் இருந்தவாறு வணிகத்தின் உரிமையாண்மையின் பெறுமதி யாது?

(இ) யூன் மாத முடிவில் மொத்தச் சொத்துக்களின் பெறுமதியில் ஏற்பட்ட அதிகரிப்பு அல்லது குறைவு எவ்வளவு?

(ஈ) 30.06.2022 இல் நிகழ்ந்த பின்வரும் கொடுக்கல் வாங்கல் எவ்வாறு ரூபன் வணிகத்தின் மேற்குறித்த கணக்கீட்டுச் சமன்பாட்டின் மீது தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதைக் குறிப்பிடுக.
வங்கிக்கடன் வட்டி ரூ.3 000 உட்பட வங்கிக்கடன் தவணைப்பணம் செலுத்தியது ரூ.12 000

(4 புள்ளிகள்)

iv. 2022 மார்ச் மாதத்தில் கஜமுகன் வணிகத்தில் நிகழ்ந்த கொள்வனவுகள் தொடர்பான தகவல்கள் வருமாறு

04.03.2022 பாத்திமாவிடம் கடனுக்கு கொள்வனவு செய்த சரக்குகள் ரூ.30 000 (பட்டியல் இல 332)

12.03.2022 ராஜாவிடம் காசுக்கு கொள்வனவு செய்த சரக்குகள் ரூ.18 000 (கைச்சாத்து இல 085)

22.03.2022 அன்வரிடம் கடனுக்கு கொள்வனவு செய்த சரக்குகள் ரூ.42 000 (வியாபாரக் கழிவு 5%, பட்டியல் இல 465)

28.03.2022 ரிஸ்வானிடம் ரூ.80 000 பெறுமதியான தளபாடங்கள் வணிகப் பயன்பாட்டிற்காக கொள்வனவு செய்யப்பட்டது (நாட்குறிப்பு கைச்சாத்து இல 215)

**வேண்டப்படுவது**

2022 மார்ச் மாதத்திற்கான கஜமுகன் வணிகத்தின்

(அ) கொள்வனவு நாட்குறிப்பு

(ஆ) கொள்வனவுக் கணக்கு

(இ) கொள்வனவுகளின் மொத்தத் தொகை (4 புள்ளிகள்)

(மொத்தம் 12 புள்ளிகள்)

**வினா இல 06**

i. வங்கி மேலதிகப் பற்று என்றால் என்ன? (2 புள்ளிகள்)

ii. கீழே காட்டப்பட்டுள்ள மீதிகளைக் கருத்தில் கொண்டு சாம்பவி வணிகத்தின் 31.12.2021 இலுள்ள பரீட்சை மீதியைத் தயாரிக்குக

| | |
|---|---|
| விற்பனை | 285 000 |
| மூலதனம் | 125 000 |
| கடன்பட்டோர் | 60 000 |
| கடன்கொடுத்தோர் | 20 000 |
| தளபாடம் | 220 000 |
| கொள்வனவு | 130 000 |
| சம்பளம் | 25 000 |
| பெற்ற வாடகை | 5 000 |

(2 புள்ளிகள்)

iii. ஆதித்யா வணிகத்தின் 2021.12.31 ம் திகதியில் தயாரிக்கப்பட்ட பரீட்சைமீதியின் வரவு நிரலின் கூட்டுத்தொகையை விட செலவு நிரலின் கூட்டுத்தொகை ரூ.28 000 அதிகமாகக் காணப்பட்டது. அது தொடர்பாக பின்வரும் வழுக்கள் இனங்காணப்பட்டன

1) ரூ.45 000 பெறுமதியான விற்பனைப் பட்டியலுக்கான பதிவுகள் கணக்கேடுகளில் முற்றாகப் பதியாமல் விடப்பட்டிருந்தது.
2) வாடகை செலுத்தியது ரூ.5 000, வாடகைக் கணக்கில் ரூ.7 000 எனப் பதியப்பட்டிருந்தது.
3) வங்கிக்கடன் மீளச் செலுத்தியது ரூ.30 000 காசேட்டில் மட்டும் பதியப்பட்டிருந்தது.

**வேண்டப்படுவது**

(அ) மேலே உள்ள தவறுகளைத் திருத்துவதற்கான நாட்குறிப்புப் பதிவு

(ஆ) தொங்கல் கணக்கு (4 புள்ளிகள்)

iv. 31.01.2022 இல் இருந்தவாறு ராஜ் வணிகத்தின் வங்கிக் கணக்கானது ரூ.18 000 ஐ சாதகமான மீதியாகக் காட்டியது. எனினும் இத்தினத்தில் பெறப்பட்ட வங்கிக்கூற்று மீதியானது இதிலிருந்து வேறுபட்டிருந்தது. இவ் வித்தியாசத்திற்கான காரணங்களாக பின்வருவன இனங் காணப்பட்டன.

- ராஜ் வணிகத்தின் வங்கிக் கணக்கில் பதியப்படாத கொடுக்கல் வாங்கல்கள்
  - வங்கி வசூலித்த பங்குலாபம் ரூ.8 000
  - நிலையியற் கட்டளையின் படி வங்கி செலுத்திய காப்புறுதிக் கட்டணம் ரூ.12 000
- வங்கியால் ராஜனின் நடைமுறைக் கணக்கில் பதியப்படாத காசோலைகள்
  - வழங்கப்பட்ட போதும் வங்கியில் சமர்ப்பிக்கப்படாத காசோலைகள் ரூ.16 000
  - வைப்புச் செய்யப்பட்ட போதும் வங்கியால் செலவு வைக்கப்படாத காசோலைகள் ரூ.13 000

**வேண்டப்படுவது**

(அ) 31.03.2022 இல் இருந்தவாறு ராஜ் வணிகத்தின் வங்கிக் கணக்கு மீதியைச் செம்மையாக்குக?

(ஆ) 31.03.2022 இல் இருந்தவாறு வணிகத்தின் வங்கிக்கணக்கிணங்கக் கூற்றைத் தயாரிக்குக?

(4 புள்ளிகள்)

(மொத்தம் 12 புள்ளிகள்)

**வினா இல 07**

i. வணிகத்தால் உழைக்கப்பட்ட செயற்பாட்டுப் பெறுபேற்றைக் கணிப்பதற்கான இரு படிமுறைகளும் எவை?

(2 புள்ளிகள்)

ii. பின்வரும் நடவடிக்கைகளுக்கான நாட்குறிப்புப் பதிவுகளைத் தருக?

(அ) செலுத்த வேண்டிய வாடகை ரூ.5 000

(ஆ) அறவிடமுடியாக்கடன் ரூ.3 000

(2 புள்ளிகள்)

iii. 31.12.2021 இல் இருந்தவாறு அம்சவி வணிகத்தின் பரீட்சைமீதி வருமாறு

| | வரவு (ரூ) | செலவு (ரூ) |
|---|---|---|
| மூலதனம் | | 555 000 |
| பெற்ற வாடகை | | 6 000 |
| காணிகட்டடம் - கிரயத்தில் | 600 000 | |
| இயந்திரம் - கிரயத்தில் | 350 000 | |
| விற்பனை | | 750 000 |
| உட்சுமைகூலி | 4 500 | |
| சரக்கிருப்பு 01.01.2021 இல் | 16 250 | |
| காப்புறுதி | 11 000 | |
| விளம்பரம் | 14 500 | |
| பெற்ற கழிவு | | 8 000 |
| கொடுத்த கழிவு | 6 300 | |
| கடன்பட்டோர் | 12 000 | |
| காசு மீதி | 23 450 | |
| கடன்கொடுத்தோர் | | 21 000 |
| கொள்வனவு | 435 000 | |
| வங்கிக்கட்டணம் | 2 000 | |
| 10% வங்கிக்கடன் | | 150 000 |
| தொலைபேசிக்கட்டணம் | 15 000 | |
| | 1 490 000 | 1 490 000 |

**மேலதிக தகவல்கள்**

- 31.12.2021 இல் இருந்தவாறு இருப்புக்கள் ரூ.40 000
- இயந்திரங்களுக்கு நேர்கோட்டு முறையில் வருடாந்தம் 10% பெறுமானத்தேய்வு செய்யப்படல் வேண்டும்
- கடன்பட்டோரில் ரூ.2 000 ஐ அறவிடமுடியாக்கடனாகப் பதிவளிக்குக.

**வேண்டப்படுவது**

(அ) 31.12.2021 இல் முடிவடைந்த வருடத்திற்கான இலாபம் அல்லது நட்டத்தைக் காட்டும் கூற்று

(ஆ) 31.12.2021 இல் இருந்தவாறு நிதிநிலைமைக் கூற்று

(மொத்தம் 12 புள்ளிகள்)